உ

☞ இப்புத்தக விற்பனைமுற்றும் வடதிருமுல்லைவாயில் தீபகைங்கரியத்திற்கு உபயோகிக்கப்படும்.

புதுவண்ணாரப்பேட்டை வித்யாவிர்த்தி நிலய சபையார்.

முத்தியாலுப்பேட்டை பூர்வகலாப்பிரசங்கநிகேதன சபையார்.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# சேந்தநாயனார்புராணம்.

## பாயிரம்.

### காப்பு.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மணிசெறியுந் திரையாழி யங்கைசெறித் திட்டுவளர்
சைய மேய, இணிசெறியு மகத்தியன்குண் டிகைநீரை
க்கரடவுருச் சிவணி வீழ்த்துப், பணிசெறியும் வரியரி
சூழ் தண்டலைதண் டலைகொள்ளப் பணித்தான் றன்
னை, யணிசெறியு மன்பரகத் தனுதினம்வா ழைங்
கரனை யன்பிற் றாழ்வாம்.

### சபாநாயகர்.

கொச்சகக்கலிப்பா.

நற்பதவி பற்பலவு நண்ணியுயிர் களிதூங்கப், புற்ப
தனும் பதஞ்சலியுங் கண்டுதொழப் பொற்பொதுவி,
லற்புதவுற் பவத்திருக்கூத் தைந்தொழிலின் பொருட்
டியற்றுஞ், சிற்பததற் பரனடிகள் சிந்தையில்வைத்
திறைஞ்சுவாம். (க)

### சிவகாமியம்மையார்.

செம்பொன்மணி மன்றூடல் சீவர்களி னிமித்தமே
தம்பெருமா னியற்றலினங் நடங்காணுந் தகுபலனு
மும்பர்முத லுயிர்களுக்கே யுறவுவந்து தரிசிக்கும்
பம்புமருட் சிவகாம சுந்தரிதாள் பரவுவாம். (உ)

### விநாயகக்கடவுள்.

இருண்மலவெங் களிறுபிணித் தடக்கியெழி லடிய
வர்க்குத், தெருண்மலியுஞ் சிவஞானந் திகழ்த்தவிரு

கரதலத்தில், வெருண்மருவும் பாசமொடங் குசமேந் தி விரைசுலவு, மருண்மதமூற் றிருக்குமத்தி முகப் பெருமா னடிபணிவாம். (௩)

சுப்பிரமணியக்கடவுள்.

வீறுதயித் தியரழிய விண்ணவர்தஞ் சிறைமீளத் தேறுமறை முனிவர்களுஞ் சித்தர்களுங் குதூகலிக்க மாறுபடுஞ் சூருடலை வகிர்ந்தவுடம் பிடியேந்து மாறுமுகக் குகனடிக ளனுதினமுந் தொழுதிடுவாம்.()

திருநந்திதேவர்.

போதரும்வா னவர்திரள்கள் புறத்தொதுங்க வவர் மகுட, மீதுதிகழ் மணித்திரள்கண் மிக்கோங்கச் சூர ல்கொடு, மோதியரன் சந்நிதியின் முன்னுலவு நந்தி பிரான், பாதமலர் பரவியிரு வினைத்திரள்கள் பாற்று வாம். (௫)

சரஸ்வதியம்மை.

வசையில்கலைத் துறைவளமும் வந்திப்போர்க் கெவ ரானு, மசைவிலருஞ் சொல்வளமும் பொருள்வளமு மருள்வளமுந், திசைமுழுதுந் திறல்வளமுஞ் சீர்த்தி வள முந்தருநல, விசைமடந்தை யிணைச்சரண்க ளெ ந்நாளு மேத்துவாம். (௬)

சைவசமயதூரவர் நால்வர்.

என்பினையு முயிர்ப்பித்த விறையையுமப் பூதிமகற், கன்பினுயி ரளித்தவாக் கரையரையுங் கராக்கவர்ந்த, நன்புதல்வன் றனைமீட்ட நம்பியையு மூகைதனை, முன் புபுகல் வித்தவருண் முதல்வரையு முறைபணிவாம்.()

திருத்தொண்டர்கள்.

ஆரணவா கமநெறியொ டரும்பத்தித் திறநெறியிற், பூரணரா மறுபத்து மூவர்புகழ்ப் பதமுமுத்திப், பா ரணராந் திருவிசைப்பாப் பகர்ந்தவர்தம் பதமுமற் றைக், காரணரா மடியவர்தம் பதமுநனி கருதிடுவாம்.

### பட்டினத்துச்சுவாமிகள்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

தம்பரமன் றிருவடிப்பற் றேயன்றிப் பிறபற்றுச் சா
ரா ராகி, யிம்பர்நிறை செல்வமெலா மறத்துறந்தெம்
மிறைதலங்க ளியல்பிற் போற்றி, யும்பர்பணி யொற்றி
நகர் தன்னிலொளிர் சிவலிங்க வுருவா யோங்கு, நம்
பரம ராந்திருவெண் காட்டடிக ளிணையடிக ணயந்து
வாழ்வாம். (௯)

### சேந்தநாயனார்.

சாந்தராந் தங்குரவர் பணித்தபடி தனச்சூறை
விடுங்காற் கிள்ளி, வேந்தனாங் கெய்திவியன் சிறையி
லிட வவரருளான் மீண்டு தில்லை, போந்துதீங் களிய
முத மருத்தியரன் செம்பொனடி புக்கின் பார்ந்த,
சேந்தனா ராம்பெரியர் சேவடிக ளகத்திருத்திச் சிந்
திப் பாமால். (௧௦)

### இராமலிங்கசுவாமிகள்.

திருக்கயிலைப் பரம்பரையிற் பொம்மபுரச் சிவ
ஞான தேசி கன்றன், பெருக்கமிகு மாதீனத் தொண்
டர்தமு ளொருவராய்ப் பிறங்கித் தில்லை, யிருக்குமெ
ழி லீசான மடத்தினமர்ந் துண்மைநெறி யெவர்க்கு
மன்பின், வருக்கமொடு மளித்தருளு மிராமலிங்க
முனிவரடி வணங்கி வாழ்வாம். (௧௧)

### நூல்வந்தவழி.

வேதமொடா கமங்களினற் சாரமாய் விளங்குபதி
னெண்பு ராணத், தோதுசிவ புராணத்து ளொன்றா
கும் பௌடிகவுத் தரத்தி லெம்மான், நீதிலடி யவர்
பெருமை தமிற்றிருவெண் காடர்சரி தத்தி றத்திற்,
போதுறுமிச் சேந்தனார் சரிதையைப்புன் பாடலி
னாற் புகன்றிட் டேனால். (௧௨)

### அவையடக்கம்.

ஆரியனாற் பணிசிரமே லமைவுற்றே யானறைந்த
விப்பு ராணத், தேரியல்பு சற்றுமிலா திருக்கினுநல்
லோரிதனை யெண்ணு ராகித், தாரியலு மணமலரோ
டஃதில்லா நாரினையுந் தாங்கொண் டாங்குக், காரி
யலுங் கண்டரடி யவர்பெருமை யாலிதுவுங் கைக்
கொள் வாரே. (௧௩)

பாயிரம் முற்றிற்று.

---

## நூல்.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொன்னிவட கரைநண்ணும் புராந்தகன்றன் றலங்
கடமுட் புனிதம் வாய்ந்து, மன்னுவள மலிந்தோங்
கும் பூம்புகார்ப் பட்டினத்து வணிகர் தம்மு, ளுன்னு
சிவ நேசருமொண் ஞானகலாம் பையுந்தரும மோம்பி
வாழ்நாட், பன்னுமொரு பெண்ணன்றி யாண்மக
வொன் றின்மையினாற் பரிவு ழந்தார். (௧)

புத்திரப்பேற் றருவிரதம் புரிந்தொழுகுங் காலொ
ருநாட் கயிலை மேய, வத்தனொரு விளையாட்டாற்
கணங்கள்புடை சூழவுமை யருகு மேவ, வித்தரணி
வளநோக்கி யெழுந்தருளுங் காற்புகா ரெழிலி னுள்
ளம், வைத்தியக்கர் கோன்வணங்கப் பசுபதியா ரவர்க்
கீது வகுத்திட் டாரால். (௨)

இன்னதலத் தருத்திமிகுத் தலின்மனிதப் பிறந்தை
யெய்திச் சின்னாள் வைகிப், பின்னரெமை யடைக
வென வருளலுமங் கிரிவணங்கிப் பெரும யிங்ஙன்,
மன்னிடுங்கான் மகவாகி யுண்மையுணர்த் துகவென்ன
வகுக்க வங்ஙன், றுன்னியருள் வாமென்னப் பணித்
திறைவர் சூழ்கணங்க ளோடுஞ் சென்றார். (௩)

தனதருமற் றவ்வண்ணஞ் சிவநேசர் தனயராய்த் திருவெண் காட, ரெனுந்திருநா மத்தினராய்ச் சகல கலை களும்பயின்றே யெம்பி ரானார், கனவிலரு ளிய வாறு சிவபூசை யாதிகளிற் கவின்று மிக்க, வனகமுறு நிதிபெற்றுச் சிவகலையம் மையைமணந்தே யமர்ந்தா ரன்றே. (ச)

இந்நாளி லிடைமருதி லமர்பரமன் சிவசருமர் சுசீ லை யென்னு, மன்னார்க ணிமித்தமொரு மகவாகி மாலூ ரத் தடியின் மேவக், கொன்னுரு மம்மகவி னிறைய வர்க்குப் பொன்னீந்து கொடுவெண் காடர், நன்னும மெழின்மருத வாணரென நவிற்றிநனி போற்றி னார். (ரு)

விளர்மருத வாணர்பல வாணிபத்திற் பொருளீட்டி விளங்கி வாழ்ந்து, வளர்பதினா றாண்டுகழி தலுமறை யுற் றேகியிடை மருதி லன்பாற், றளர்வொடுதந் திரு வுருவப் படஞ்சாலப் பூசித்துச் சிவயோ கத்திற், கிளர் தருநற் சிவத்துவிசச் சிவசருமர் பாலொளியாய்க் கெ ழுமித் தோன்றி. (சு)

அவ்வொளியி லவர்கும்பத் தொடுமேவரைத் தக வொடுக்கி யாங்கு மேய, செவ்வியநற் சிவலிங்கத் துற் றமர்ந்தா ரிதுநிற்க திருவெண் காட, ருவ்வயிற்றம் மகற்காணு துலைவுறுங்காற் றேவியா ரும்பா லீவா, னிவ்வயினும் மகனீந்த திதுவெனவோர் சிறுபெட்டி யெதிரே வைத்தார். (எ)

ஓதற்ற வுதுதிறந்து நோக்கவொரு காதற்ற வூசி யோடு, காதற்ற வூசியுமே வாராது காணுங்கடை வ ழிக்கென் றீது, சாதிக்கு மோரோலைத் துண்டுமிருப் பதுகண்டு தளர்வற் றெம்மான், றீதற்ற திருநோக்கம் பரிசம்பா வனைவார்த்தை யாதித் தீக்கை. (அ)

முன்னமே பெற்றுளரா கவினவர்தம் மன்னைமனை முதலி யோர்க்குத், துன்னுநிலை யாமையினைத் தெரு ட்டியகன் றுயிர்த்தோழ ராகுஞ் சேந்த, ரென்னுமவர் தமைநோக்கி யிப்பொருண்முற் றுஞ்சூறை விடுக வென்னப், பன்னியருந் துறவறமேற் கொண்டரிய நிட்டையினிற் பதிந்தா ரன்றே. (கூ)

யானையெருத் தத்திவரு மிறைவர்பெரு வாழ்விற் றென் றளக்க லாகு, மானினப ரத்திவரு மரனடிக் காட் படுமிந்த வன்பர் செல்வம், வானைவிளக் கிடுமரி யின் பேர்கொள்கம்பன் வரையமகி யேந்த னந்த, ஞனிறுத்துக் கூறினுமுற் றுதென்ப னேலதனை நவி ற்ற லாமே. (௧௦)

தந்தையிலான் றந்தையெனத் தானழைக்கப் பெற் றபெருந் தகைமை யாளர், நந்தலிலாப் பொருட்பெ ருக்கை நாளுளு நன்னெறியி னடாத்தி நின்ற, சந்த முறு குணக்குரிசி லானவருட் சேந்தரெனுஞ் சாந்த ரன்னோர், பந்தமறுத் துயர்துறவு பூண்டபினர்ப் பணித்தபணி சிரமேற் கொண்டே. (௧௧)

பண்டாரந் தனைத்திறந்து பல்லோருங் கொள்கவெ னப் பணிக்க யாரும், விண்டாரும் வேட்கைகொ ளும் வெறுக்கையினை மனம்வெறுக்க விரைந்து வவ் விக், கொண்டாராய்ச் சேறலையந் நாட்டரசு கேட் டுமனங் கொதித்துச் சென்று, தண்டாத பொக்கசத் தைத் தகைந்துதன திலச்சினையைத் தரித்துப் பின் னர். (௧௨)

பார்நிலவும் பார்த்திபனப் பட்டினத்தார் தமக்கை பெறும் பால ருக்கங், கேர்நிலவு மப்பொருளுட் சில வளித்தன் னவர்தலைமை யிவர்க்கு நல்கிச், சீர்நிலவு மிறதருமங் கட்கேனை நிதியினைத்தன் கோசஞ் சேர்

த்தி, நேர்நிலவுஞ் சேந்தனார் தமைமற்றும் பொருளி ருப்பை நிகழ்த்து கென்றான். (கங)

ஐயவினி தலதுபிறி திலேயெனவு மையமுறு மரசன் வேர்த்து, மெய்மையிவர் சொலுமளவும் விட்டிடுவி ரல்லிரெனச் சிறையி னுய்ப்பத், தையலமர் பாலுடை யான் றனியுளமிவ் வாறுகிற் றமிய னடிச், செய்யவுள தெவனென்றே யின்புடனச் சிறையகத்திற் சிவணி னரால். (கச)

தவமதனைச் சிறையிட்ட தன்மைபோ லரசனந்தச் சாந்த மேய, சிவமுதிர்நற் சிந்தையரைச் சிறையிடவு மவர்சற்றுந் தியங்கா ராகிப், பவமறநந் தமக்கிறைவர் பணித்தபடி சூறையிடல் பண்ப தன்றென், றவமுறு சிந் தையினினைத்த பாதகத்தா லடைந்ததீ தமைவே யென்றார். (கரு)

இப்பெரியார் மனைவியார் கற்பினுக்கோ ரெல்லையிலா ரென்செய் வாரா, லப்பனைவேண் டிக்கலுழு மருமக வைக் கைக்கொண்டே யயலூ ரேகி, யெப்பொழுது மியற்றியறி யாவிழிபுத் தொழிலியற்றி யிறுக்குங்கூலி, யொப்புடன்கொண் டுயர்மகவைப் பேணியடி யவர் பூசை யுகந்துற் றாரால். (கசு)

இவர்நிலேயின் னணமிருக்க வெண்காடர் பஃறளிக டோறு மேகிச், சுவைகொளருட் பாமாலை சூடிவளர் யோகநிலை துன்னி வாழ்ந்து, பவனமரும் வெண்காட் டிற் படர்ந்துறையும் பான்மையினைப் பரிவிற் கேட் டுத், தவமுடைய சேந்தரு மனைவியார் மகனுடெய் தித் தரிசித் தேத்தி. (கஎ)

கண்வழியி னீரொழுகக் கம்பித்த வுடலொடுதெய் கா தற் சேயை, மண்வழியின் வீழ்த்திமிக மறுகுமனத்

தோடவர்த மலர்த்தாள் சூடி, யெண்வழியி னவர்நிலை
மை யெண்ணியுள நைந்துருகி யேங்கி யங்ஙன், விண்
வழியி னிலைவதறி வீழ்ந்தவொரு மின்னென்ன வெ
ருவி நின்றார். (கஅ)

கலிவிருத்தம்.

அண்ண லந்த வரிவையை நோக்கியே
யெண்ண மென்கொனீ யாரியம் பாயெனக்
கண்ணு மும்முடைக் கான்மல ரைச்சிர
கண்ணுஞ் சேந்தரென் பார்மனை நானென்றார். (கசு)

இந்த வண்ண மிருப்பதென் னென்றலும்
வந்த வண்ணம் வகுத்தனர் மாதரா
ரந்த வண்ண மகங்கொடெம் மையர்தாஞ்
சிந்தை யெண்ணித் திகைப்பற வோதுவார். (உ0)

அம்மை நீயொன்று மஞ்சலை யென்றெழீஇ
யம்மை யப்ப னருட்பெருங் கோயிலுட்
செம்மை மேவுறச் சென்று சுரநதிச்
சும்மை கொண்டவ னைத்துதி செய்குவார். (உக)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

*மத்தனை தயிருண் டானு மலர்மிசை மன்னி னானு, நித்தலுந் தேடிக் காணு நிமலனே யென்னும் பாட, லித்தையங் கருளக் கேட்ட வினன்மதி முளரிக் கண்ண, ரத்திவத் திரத்தாற் கன்பி னருளுவா சாயி னூரால். (உஉ)

---

* மத்தனை தயிருண் டானு மலர்மிசை மன்னி னானு
நித்தமுந் தேடிக் காணு நிமலனே * யமல மூர்த்தி
செய்த்தனைக் கயல்பாய் நாங்கூர்ச் சேந்தனை வேந்த னிட்ட
கைத்தளை நீக்கி யென்முன் காட்டுவெண் காட்டி னானே.

* நீபோயின்று எ-ம், பாடம். இத்திருப்பாட்டால், இந்நாயனருடைய திருவவதாரதகர் நாங்கூரெனத் தெரிகிறது.

பட்டினப் பிள்ளை பாத பங்கயப் பற்றன் மற்றை,
விட்டபற் றுடையன் சேந்த னென்னுமோர் விரதன்
றன்னை, யிட்டனன் காவ லில்லி லிங்கர்க் காவ லா
ளன், கட்டற வவனை யீண்டுத் தருகுதி கடிதி னென்
றார். (௨௩)

குடவயிற் றெம்மான் பெம்மான் குன்றினி லெள
ளை தன்னை, விடமுனர்க் கிடைத்த தின்றிவ் வெண்
காடு தன்னி லுய்க்கக், கடவதா யிற்றிவ் வன்பன்
றனையெனக் குதூக லித்துத், தடவிக டக்கை யுய்த்
துத் தனிச்சிறை சீத்தெ டுத்து. (௨௪)

நாயகன் பணித்த வாறே நாடும்வெண் காடர் முன்
னர்ச், சேயசெங் கரத்தான் மூத்தோன் சேர்த்தலுஞ்
சேந்த னார்தா, மேயவெங் துயிலு ணர்ந்தார் போன்
மென விழித்தெ ழுந்து, தாயக ரான தம்பட் டினப்
பெருந் தகையைக் கண்டார். (௨௫)

அத்தவோ பிரிந்தேன் பன்னா ளருண்மொழி யயர்த்
த லாலே, யித்தகை யடைந்தே னென்ற னிரும்பவச்
சிறையும் விட்ட, வுத்தம திருவுள் ளத்தி லுள்குவான்
வேண்டு கின்றேன், சித்தமெத் தகைய தோவென்
றிணையடி சேவித் திட்டார். (௨௬)

அருட்கட லான வெங்கை யன்பநீ யஞ்ச லஞ்சா,
திருட்கட னஞ்சுண் டாண்ட வெம்பிரான் விடவுன்
னானாற், பொருட்செறி வேத வேள்வி புங்கவ ருணாற்ற
லாலே, யிருட்கலி நாடொ ணாதை வெழிற்றில்லை நகரில்
வைகி. (௨எ)

காட்டுறு விறகு விற்றுக் கைக்கொளும் பொருளா
னன்பர்க், கூட்டுறு நியதி தப்பா தூற்றரும் புதல்வ
னொடு, வேட்டுறு மனையு மோம்பி மேவுதி யிதுவே

MAHAMAHOPADHYAYA
no U V SWAMINATHA IYER LIBRARY

றும் பூதுட் கொண்டு, கழித்தொரு வாறு கங்குல் காலேயி னெழுந்து செய்யுஞ், செழித்ததன் னியதி முற்றிச் சேர்ந்தனன் செம்பொற் கோயில். (௪0)

தொல்லேமா மறைமு ழங்கு மம்பலச் சூழ லாகு, மெல்லேயாங் கணுங்தெய் வீக மணஞ்சுலா யிருப்ப தோர்ந்தே, தில்லேவாழ் மறையோர் தொண்ட ராதி யர் செறிய வுட்போ, யொல்லேயாங் கெய்திக் கண்டா னுதிர்வுறு களியின் றாவல். (௪௧)

மேற்படி வேறு.

ஆண்டது நோக்கலு மா டினன் பாடின னேயர்க ளைத் திறமங், கீண்டிய வந்தண ராதிய ரோர்ந்திட வினி தினி சைத்தனனல், யாண்டுள ரோவவ னைத்தரி சிப் பதெவ் வாறென வேங்கினனக், காண்டலில் வேட் கைய ராய்ப்பிற ருங்களுல் வுற்றன ரதுவிற்க. (௪௨)

மெய்த்தனு மதிவயின் முற்றுவி ழாவதின் மிளிரிர தங்கடவு, மத்தின முற்றின மாகவ திற்பொழி மழை யினி லதுசெய்யா, தித்தின மின்மையி னிதுபுரி வாமென வெம்பெரு மானேயிவர், வித்துாட டத்தலு மத்தகு தேர்நிலே விட்டகல் வுற்றிலதால். (௪௩)

இவ்வகை நாடிய யாவரு மேங்கியி ருந்துழி யாங் கொருசார், செவ்விய வெம்பெரு மான்றிருக் காட்சி யிற் சிந்தனே யைப்பதிவித், தெவ்வகை யிவ்விர தஞ் செலு மென்றென் றெண்ணுறு சேந்தர்முன, மவ்வயி னப்பெரு மானச ரீரியி னுலருள் செய்குவரால்.(௪௪)

கடல்புடை மேவிய காசினி போற்றிடு காவல னும் பிறரும், மிடலொடு கேட்டுளம் விம்மித ராயிட வேத மொ ழிப்பொருளிற், றிடமுறு சேந்தநங் தேர்நட வும்படி செப்புக பல்லாண்டென், றடல்விடை யே றிய வைய ருரைத்தன ரார்த்தன துந்துபியே. (௪௫)

சேந்த ரெனும்பெரி யாரது கேட்டடி யேன்முனஞ் செய்தவமென், வாய்ந்த பெருந்தவி சோர்னும விக்க ருள் வண்ணம தெனவென்பா, லேய்ந்த வருட்டிற மென்புகல் வேனெதி ரியற்றுறு கைம்மாறென், றேய் ந்த மதிச்சிறி யேனென வெந்தையைத் திருவுள மேல மையா. (சசா)

* மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள் வஞ்சகர் போ யகல, வென்னு மிசைப்பதி கத்தை யியம்பலு மெழு திக ரித்திகிரி, துன்னு நிலைக்கள மோவி நடந்தே சுடர்மணி மாளிகை சூழ், பொன்னியல் வீதிவ லம்வ லம்வந்து பொலிந்தது நிலைதன்னில். (சஎ)

இத்திற நிகழ்வுழி வானக துந்துபி யெங்கு மதிர்ந்த னவால், வித்தக விண்ணவர் பூமழை வீழ்த்தினர் மெய்த்தவர் விம்மிதராய்க், கைத்தல முச்சிகு வித்து டல் கம்பித முற்றிரு கண்களினீர், மெத்திய வன்பினி னரகர வென்ன வியந்து துதித்தனரே. (சஅ)

அரையனு மந்தண ரும்பிற ருந்தமை யன்பினி றைஞ்சு முனம், புரையறு மன்பி னிறைஞ்சி வதிந்து

---

சேந்தநாயனார்திருப்பல்லாண்டு. கோயில் - பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

* மன்னுகதில்லைவளர்கநம்பத்தர்கள்வஞ்சகர்போயகலப் [ங்க
பொன்னின்செய்மண்டபத்துள்ளேபுகுந்துபுவனியெல்லாம்விள
வன்னநடைமடவாளுமைகோனடியோமுக்கருள்புரிந்து [மே.
பின்னைப்பிறவியறுக்கநெறிதந்தபித்தற்குப்பல்லாண்டுகூறுது

எந்தையெந்தாய்சுற்றமுற்றுமெமக்கமுதாமெம்பிரானென்றெ
சிந்தைசெய்யுஞ்சிவன்சீரடியாரடிநாய்செப்புரை [ன்று
யந்தமிலாநந்தச்சேந்தனெனைப்புகுந்தாண்டுகொண் டாருயிர்மே
பந்தம்பிரியப்பரிந்தவனேயென்றுபல்லாண்டுகூறுதுமே. [ற்

திருச்சிற்றம்பலம்.